தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண். 52/பேரூ/2022

நாள் 30.05.2022

திரு. V.Y. லோகநாதன்,
பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
P. வேலூர் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர், எண்.19, அண்ணா சாலை கடைவீதி (யுவராஜ் ஜவுளி ஸ்டோர்) என்ற முகவரியில் ஜவுளி கடை நடத்திவரும் திரு. V.Y. லோகநாதன் என்பவரது 04.04.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.05.2022ல் பெறப்பட்டு, 52/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர், எண்.19, அண்ணா சாலை கடைவீதி (யுவராஜ் ஜவுளி ஸ்டோர்) என்ற முகவரியில் ஜவுளி கடை நடத்திவரும் திரு. V.Y. லோகநாதன் என்பவர் தமது 04.04.2022 நாளிட்ட புகார் மனுவில் தான் 40 வருடங்களாக பரமத்திவேலூர் கடைவீதியில் ஜவுளிக் கடை நடத்தி வருவதாகவும், தமது கடைக்கு எதிரில் உள்ள சக்தி ஜுவெல்லர்ஸ் கடையும், அதன் மாடியில் நான்கு கடைகளும், கடையின் பின்புறம் நான்கு வீடுகளும் உள்ளதாகவும், அக்கட்டடத்தின் கழிவுநீரை சாலையில் 25 அடி பள்ளம் தோண்டி 6 இன்ச் சிமெண்ட் குழாய் பதித்து தனது கடைக்கு முன்பு உள்ள கழிவுநீர் கால்வாயில் விட்டுள்ளனர் என்றும், இதனை பஞ்சாயத்து செயல் அலுவலர் அனுமதியுடன் செய்துள்ளதாக கூறுகின்றனர் என்றும், பல நாட்களாக தாங்கள் இதை துணி துவைக்கும் தண்ணீர் என சாதாரணமாக நினைத்திருந்த நிலையில், தற்போது ஆய்வு செய்து

பார்த்ததில் செப்டிக் டேங்க் தண்ணீர் என்றும், இதனால் சுகாதார சீர்கேடும், துர்நாற்றமும் வீசுகிறது என்றும், எனவே தனது கடைக்கு முன்பு விட்டுள்ள கழிவுநீர் குழாயை அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இது குறித்து தான் அளித்திருந்த ஒருங்கிணைந்த மற்றும் எளிமையான பொது மக்கள் குறைதீர்க்கும் மனுவிற்கு 13.4.2022 நாளிட்ட கடிதம் மூலம் வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள பதிலறிக்கையில் மேற்படி பகுதியின் கழிவுநீர் குழாயினை தள ஆய்வு செய்ததில் கழிவுநீர் குழாய் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு பொருத்தப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரரின் புகார் மனுவின் மீது பரமத்திவேலூர் பேரூராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய மேல்நடவடிக்கை ஏதும் இல்லை என்று குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என்றும், அதன் நகல், புகைப்பட நகல்கள் ஆகியவற்றையும் தனது புகார்மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

2. வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 23.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 18.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் பரமத்திவேலூர் தேர்வுநிலை பேரூராட்சி சார்பில் பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்துவரும் திரு. P. குருசாமி ஆகியோர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

3. மனுதாரர் திரு. V.Y. லோகநாதன் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் கடைவீதியில் எனது ஜவுளி கடைக்கெதிரில் உள்ள கட்டடம் நான்கு மாடி கட்டடமாகும். இந்த கட்டடத்தின் கழிவுநீரை எனது கடைக்கு அருகே சாலையில் பள்ளம் தோண்டி குழாய் பதித்து அதில் கழிவுநீரை விட்டுவருகின்றனர். கட்டடத்திலிருந்து வரும் கழிவுநீரை வெளியேற்ற எதிரிலுள்ள எங்களது கடைக்கெதிரில் உள்ள கழிவுநீர் குழாயுடன் இணைத்துள்ளனர். மேற்கண்ட மாடி கட்டடத்தின் கீழேயே கழிவுநீர் கால்வாய் இருந்தும் அதனை சிலாப் கொண்டு மூடிவிட்டு எதிரிலுள்ள எங்களது பகுதியில் கழிவுநீர் குழாயைப் பதித்து கழிவுநீரை வெளியேற்றி வருகின்றனர். அதனால் எனது கடைக்கு அருகேயும், பக்கத்திலுள்ள வீடு மற்றும் கடைகளில் உள்ளவர்களுக்கும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து துர்நாற்றமும் வீசுகிறது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சியில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்து எங்களது பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தடுத்திட ஆவன செய்திடுமாறு இம்முறை மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். மேலும் இதுகுறித்த புகைப்பட நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. பரமத்தி வேலூர் பேரூராட்சியில் சுகாதார ஆய்வாளராக (Sanitary Inspector) பணிபுரிந்துவரும் திரு. P. குருசாமி இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் கடைவீதியில்

40 வருடங்களுக்கு முன்பு கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டு, அதில் கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேற்கண்ட இடம் என்னால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டபோது அங்கு கழிவுநீர் ஏதும் தேங்கவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரார் குறிப்பிட்டுள்ள மூடியுள்ள சாக்கடையை தூர்வாரி சரி செய்வதற்கு பேரூராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள், பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளர் திரு. குருசாமியின் அவர்களின் வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரால் அளிக்கப்பட்டுள்ள புகார் சுகாதார சீர்கேடு என்பதோடு கடைவீதியில் அமைந்துள்ள கட்டடங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சம்மந்தப்பட்ட பிரச்சனை சாதாரணமாக பேரூராட்சி அளவில் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

- மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி, மனுதாரர் தனது புகார் குறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் திங்கள் தின கோரிக்கை மனுக்களிலும் தமது புகார் குறித்து மனு அளித்துள்ளார் என்பதும் தெளிவாகிறது.

- மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்டுள்ள புகார் மனு குறித்து, வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள பதிலறிக்கையில் மேற்படி பகுதியின் கழிவுநீர் குழாயினை தள ஆய்வு செய்ததில், கழிவுநீர் குழாய் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு பொருத்தப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரரின் புகார் மனுவின்மீது வேலூர் பேரூராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய மேல்நடவடிக்கை ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டு, மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. இச்செயல் ஏற்புடையதாக இல்லை. மனுதாரருக்கு பாதிப்பு இல்லையென்றால் அவர் இம்முறைமன்ற நடுவத்தினை நாடவேண்டிய அவசியம் இல்லை.

- மனுதாரர் அளித்துள்ள புகைப்படங்களின்படி, அண்ணாசாலை கடைவீதியின் இருபுறங்களிலும் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது தெளிவாக அறியமுடிகிறது. எனினும், அதனை சிலாப்கொண்டு மூடிவிட்டு, எதிர்புறமுள்ள மனுதாரர் கடை பகுதியில் சாலையை பள்ளம் தோண்டி குழாய் பதித்து அதன்மூலம் கழிவுநீரை வெளியேற்றி வருவதாக மனுதாரரின் புகார் மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், விதிமுறைகளின்படி எதிர்புறம் அமைந்துள்ள நான்குமாடி கட்டிடத்தில் அமைந்துள்ள நான்கு கடைகள் மற்றும் கடையின் பின்புறம் உள்ள நான்கு வீடுகள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அக்கட்டடம் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் காய்வாயிலேயே வெளியேற்றப்பட வேண்டிய நிலையில், எதிர்புறம் உள்ள கடைக்கு அருகே

விதிமுறைகளுக்கு மாறாக அமைத்து வெளியேற்றுவதை பேரூராட்சி நிர்வாகம் தவிர்த்திருக்கவேண்டும்.

- பொது சுகாதாரம் குறித்த புகார் மனுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய நிலையில், இது குறித்த புகார் இம்முறைமன்ற நடுவம்வரை மனுதாரரால் கொணரப்பட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவம் வியப்புடன், அதே வேலையில் மிக எளிதாக தீர்க்கப்பட்டிருக்கவேண்டிய குறைகளுக்கு பேரூராட்சி நிர்வாகம் அளித்துள்ள பதில் ஆகியவற்றால் பரமத்திவேலூர் பேரூராட்சியின் மெத்தனப்போக்கை படம்பிடித்து காட்டியுள்ளது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கவும் விழைகிறது

- மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தில் சக்தி ஜுவெல்லர்ஸ் என்ற கடை, அதன் மாடியில் நான்கு கடைகள் மற்றும் கடையின் பின்புறம் உள்ள நான்கு வீடுகள் ஆகிய அனைத்திலுமாக மொத்தமாக 15 பேர் உள்ள கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற முறையாக பேரூராட்சி நிர்வாகம் அக்கட்டடத்தின் பகுதியில் அமைந்துள்ள பொது கழிவுநீர் கால்வாயை தூர்வாரி, சீர்செய்து அதில் மட்டுமே கழிவுநீர் வெளியேறிட வழி செய்திருக்க வேண்டும். மாறாக எதிர்புறம் அமைந்துள்ள கடையின் அருகில் சாலையின் குறுக்கே சிமெண்ட் குழாய் பதித்து அதன் மூலம் வெளியேற்றிவருவதை தவிர்த்திருக்கவேண்டும்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட அண்ணாசாலை கடைவீதியில் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் கால்வாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சீர் செய்து கழிவுநீர் முறையாக வெளியேறிட தகுந்த துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரமத்திவேலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிய அறிவுறுத்தங்களைப் பிறப்பிக்குமாறும் மேலும், பொது சுகாதாரம் குறித்த புகார் மனுக்களின்மீது பரமத்திவேலூர் பேரூராட்சி உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் கழிவுநீர் குழாய் 40 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்ட குழாய் என்று தெரிவித்து மெத்தனமாக செயல்பட்ட செயல் அலுவலர் மற்றும் பரமத்தி வேலூர் பேரூராட்சியின் சுகாதார ஆய்வாளர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரைசெய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், தனது புகார் மனுவில் பொது கழிவுநீர் கால்வாயில் சுகாதார சீர்கேட்டினை விளைவிக்கும் செப்டிக் டேங்க் நீர் கலந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், பொது கழிவுநீர் கால்வாயில் செப்டிக்டேங்க் நீர் கலப்பது உறுதியானால் உடனடியாக கட்டட உரிமையாளர் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், முறையற்ற வகையில் குழாய் பதித்திருப்பின் உடனடியாக அதனை அகற்றிட கட்டட உரிமையாளருக்கு அறிவிப்பினை வழங்கி மேல்நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் பரமத்தி வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இந்த இடத்தினை நேரில் ஆய்வுசெய்து கழிவுநீர் இணைப்புகளை அந்தந்தப் பகுதிகளில் பொது கழிவுநீர் கால்வாய் அடைப்புகளை சரிசெய்து அந்தந்த வரிசையில் மாற்றியமைக்க ஆணையிடப்படுகிறது. பொது சுகாதாரம் மற்றும் தூய்மைப்பணி பராமரிப்பு பேரூராட்சியின் தலையாய பொறுப்பாகும். இதில் தேவையற்ற முரண்பாடுகளும் எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ள பரமத்திவேலூர் பேரூராட்சியின் செயல் கண்டிக்கத் தக்கது. இதற்குப் பொறுப்பான சுகாதார தூய்மைப்பணி அலுவலர்கள் மற்றும் பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. V.Y. லோகநாதன், யுவராஜ் ஜவுளி ஸ்டோர்,
19, அண்ணா சாலை கடைவீதி, பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம்–638 182
செயல் அலுவலர்,
பரமத்தி வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி, பரமத்தி வேலூர், நாமக்கல் மாவட்டம்–638 182
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்–1

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாள